**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திருமதி.M.S.வரலட்சுமி., பி.ஏ., பி.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ம் நாள் சனிக்கிழமை**

**IA.No.528/2025**

**in**

**OS.No.323/2021**

(CNR.NO.TNVP02-000771-2021)

சிவக்குமார் .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சபியூர் ரஹ்மான் (இறந்தவர்)
2. ஹபீபூர்ரஹ்மான்
3. சபீயூர்ரஹ்மான் (இறந்தவர்)
4. இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
   விழுப்புரம் - 605 602.
5. சார்பதிவாளர்,
   அரகண்டநல்லூர்.
6. வட்டாட்சியர்,
   கண்டாச்சிபுரம். .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 29.08.2025 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 25.09.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 17.03.2026 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ராஜ்நந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6

எதிர்மனுதாரர்கள் அறிவிப்பு சார்வாகியும் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதியால் இம்மனு காலவரையறை சட்டம் பிரிவு 5ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள சி.பி.சி. கட்டளை 22 விதி 9 படியான அபேட்மெண்ட்டை ரத்து செய்திட வேண்டி கோரிடும் மனுவினை வழக்கு தாக்கல் செய்த பின்னர் தகவல் அறிந்து இன்று தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள 7776 நாட்கள் காலதாமதத்தினை மன்னித்து உரிய உத்தரவு செய்ய கோரி பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**2. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் தரப்பில் தாந் இந்த மனுவில் மனுதாரர் என்றும் மேலும் மேற்படி அசல் வழக்கில் வாதி என்றும் வழக்கு விபரங்கள் தனக்கு நன்கு தெரியும் என்றும் மேற்படி நெம்பர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியான சபியூர் ரஹ்மான் இறந்துவிட்டதால் அவருக்குப்பின் முத்தாவல்லி பதிவியில் இருக்கும் முத்தவல்லியை 2ம் பிரதிவாதியாகவும் மற்றும் மேற்படி இறந்தவரின் தனிப்பட்ட பெயரிலான 3ம் பிரதிவாதி என்ற வகையில் அவரது வாரிசுகளை மேற்படி 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்ப்பதில் ஏற்பட்ட 7776 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்வதாகவும் மேற்படி நெம்பர் வழக்கில் பதவியின் பேரிலும் தனிப்பட்ட முறையிலும் முறையே 1 மற்றும் 3 பிரதிவாதியாக உள்ள சபீயூர்ரஹ்மான், த/பெ.ஷேக் இஸ்மாயில் என்பவர் கடந்த

17.12.2003 தேதியில் இறந்துவிட்டார் என்பது தனக்கு தெரியாமல் இருந்து வழக்கு தாக்கல் செய்த பின்னர் நீதிமன்றம் மூலமாகத்தான் தெரிந்தது என்றும் அதன் பின்னர் அவர் இறந்த தேதி மற்றும் அவரது வாரிசுகள் விபரம் பல வழிகளில் முயற்சி செய்தும் தெரியாமல் இருந்து பின்னர் உரிய விபரங்களுடன் கடந்த 20.06.2023 தேதியில் 7776 நாட்கள் காலதாமதத்துடன் உரிய மனுக்கள் தாக்கல் செய்து குறைகளை நிவர்த்தி செய்திட திருப்பப்பட்டிருந்த நிலையில் நீதிமன்ற எல்லை மாறுதல் காணரமாக திருக்கோவிலூர் சார்பு நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த நிலையில் மேற்படி திருப்பப்பட்ட மனுக்கள் தனது திருக்கோவிலூா வழக்கறிஞர் அலுவலகத்தில் வேறு ஏதோ வழக்குகளுடன் கட்டுகளுடன் சேர்ந்து காணாமல் போய்விட்டது என்றும் தற்போதுதான் தெரிகிறது என்றும் எது எப்படி இருந்த போதிலும் மேற்படி நெம்பர் அசல் வழக்கில் இத்துடன் தாக்கல் செய்யும் மனுவில் கண்டுள்ளபடி பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் அப்படி சேர்க்கவில்லையெனில் தனக்கு ஈடு செய்ய இயலாத பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டு அநீதி சம்பவிக்கும் என்றும் இந்நிலையில் ஏற்பட்டுள்ள அபேட்மெண்டை ரத்து செய்திட வேண்டி மனுவினை வழக்கு தாக்கல் செய்த பின்னர் தகவல் அறிந்து இன்று தாக்கல்ங செய்வதில் ஏற்பட்டுள்ள 7776 நாட்கள் காலதாமதம் வேண்டுமென்றோ அல்லது விருப்பத்துடனோ தன்னால் ஏற்பட்டதல்ல என்றும் தனது சக்திக்கும் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்டதாகும் என்றும் எனவே மேற்படி அபேட்மெண்டை ரத்து செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து உத்தரவு பிறப்பிக்கவில்லையெனில் தனக்கு ஈடு செய்ய இயலாத பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டு அநீதி சம்பவிக்கும் என்றும் எனவே இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள சி.பி.சி. கட்டளை 22 விதி 9 மனுவினை வழக்கு தாக்கல் செய்த பின்னர் தகவல் அறிந்து இன்று தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள 7776 நாட்கள் காலதாமதத்தினை மன்னித்தும் சமூகம்

கோர்ட்டார் சரியென கருதும் இன்னபிற உரிய உத்தரவுகளை நீதியின்படி பிறப்பித்திட வேண்டும் என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**3. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு :-**

மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி 1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/1 மற்றும் 3 பிரதிவாதிகளின் வாரிசுதாரர்களை வழக்கில் சேர்க்க மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 8290 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க தாக்கல் செய்துள்ள மனு சரியானதல்ல என்றும் மேற்படி மனு முற்றிலும் பொய்யான அம்சங்களை தனது பிரமாணப்பத்திரிக்கையில் கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மனுவை இந்த 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி செலவுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் மேற்படி மனுதார்/வாதி தனது பிரமாணப்பத்திரிக்கையில் மேற்படி நெம்பர் வழக்கில் சபீயூர் ரஹ்மான் கடந்த 17.12.2003 தேதியில் இறந்துவிட்டார் என்பது மட்டும் உண்மை என்றும் மேலும் மேற்படி சபீயூர் ரஹ்மான் இறந்தது மேற்படி மனுதாரர்/வாதிக்கு தெரியாமல் இருந்து வழக்கு தாக்கல் செய்த பின்னர் நீதிமன்றம் மூலமாக தான் தெரியவந்தது என்பது அப்பட்டமான பொய்யாகும் என்றும் மேலும் மேற்படி நீதிமன்றம் மூலமாக தெரியவந்த பின் பல வழிகளில் முயற்சி செய்தும் தெரியாமல் இருந்து பின்னர் உரிய விபரங்களுடன் கடந்த 20.06.2023-ல் 6974 நாட்கள் காலதாமதத்துடன் உரிய மனுக்கள் தாக்கல் செய்து குறைகளை நிவர்த்தி செய்திட திருப்பப்பட்டிருந்த நிலையில் நீதிமன்ற எல்லை மாறுதல் காரணமாக திருக்கோவிலூர் சார்பு நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த நிலையில் மேற்படி திருப்பப்பட்ட மனுக்களை தனது திருக்கோவிலூர் வழக்கறிஞர் அலுவலகத்தில் வேறு ஏதோ வழக்குகளுடன் கட்டுகளுக்கு சேர்ந்து காணாமல் போய்விட்டது தற்போது தான் தெரியவருகிறது என கூறுவது உண்மைக்கு

புறம்பானது என்றும் மேற்படி மனுதாரர்/வாதி பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ள அம்சங்களை குறிப்பாகவும் திட்டவட்டமாகவும் மறுதளிக்கிறார் என்றும் மேலும் மனுதாரர்/வாதி காலதாமதத்தை மன்னிக்க கோரியுள்ள மனுவில் கணக்கிடப்பட்ட நாட்கள் தவறானதாகும் என்றும் ஒவ்வொரு நாள் காலதாமதத்தையும் மனுதாரர்/வாதி நிரூபிக்க கடமைப்பட்வர் என்றும் மனுதாரர்/ வாதி தனது பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ள அம்சங்கள் உண்மைக்கு புறம்பானது என்பதால் மேற்படி மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் இந்த ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை தவிர்த்து இதர மனுதாரர்/வாதி தன்னுடைய பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ள அம்சங்களை குறிப்பாகவும் திட்டவட்டமாகவும் மறுதளிக்கிறார் என்றும் மேலும் இம்மனுவானது சுமார் 21 வருடம் 8 மாதம் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆகவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஆட்சேபணையில் கூறப்பட்டுள்ளது.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 5. தீர்வுக்கான பிரச்சினை :-

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ? என்பதே தீர்வு காண வேண்டிய பிரச்சனை ஆகும்.

**6. தீர்வு :-**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

7. மனுதாரர் இந்த மனுவினை 3வது பிரதிவாதியானவர் இறந்துவிட்டதன் காரணமாக இறந்துபோன 3வது பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் சேர்க்க வேண்டி ஏற்பட்ட காதாமதமான 7776 நாட்களை மன்னித்து உரிய உத்தரவினை பிறப்பிக்க வேண்டும் என்று இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

8. மனுதாரர் அவரது மனுவில் 1 மற்றும் 3வது பிரதிவாதிகள இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளார். மனு மற்றும் வழக்குரையை பரிசீலனை செய்யும்போது 1வது பிரதிவாதியானவர் கண்டாச்சிபுரம் பிரதான சாலையில் உள்ள முத்தவல்லியாக இருக்கும் ஷேக் இஸ்மாயில் ராவுத்ர் மகனுமான சபியூர் ரஹ்மான் இறந்தவர் என்றும் 3வது பிரதிவாதியாக சபீயூர்ரஹ்மான் த/பெ.ஷேக் இஸ்மாயில் என்பவர் இறந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சபீயூர் ரஹ்மான் என்பவர் மூத்தவல்லியாக இருப்பதால் 1வது பிரதிவாதியாகவும் தனிப்பட்ட நபராக 3வது பிரதிவாதியாகவும் காண்பிக்கப்டப்டுள்ளர். மேற்படி சபீயூர் ரஹ்மான் என்பவர் 17.12.2023ம் தேதி இறந்துவிட்டார் என்று மனுதாரர் அவரது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

9. இவ்வழக்குரையானது 2021ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சபீயூர் ரஹ்மான் என்பவர் இறந்துவிட்டார் என்பதனை நீதிம்னறத்தின் மூலமாகத்தான் தெரியவந்தது என்றும் அவரது இறந்த தேதி மற்றும் வாரிசுகள்

பற்றி விவரம் பல வழிகளில் முயற்சி செய்தும் தெரியாமல் இருந்து பின்னர் உரிய விபரங்களுடன் கடந்த 20.06.2023ம் தேதி இம்மனு தாக்கல் செய்திருந்ததாகவும் அவ்வாறு 7776 நாட்கள் காலதாமதம் இருந்ததாகவும் அதனை நிவர்த்தி செய்து மனுவினை அனுமதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

10. மனுதாரரின் மனுவினை பரிசீலனை செய்யும்போது மனுதாரர் இறந்துபோன நபரின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். இறந்துபோன நபரின் மீது வழக்கு தாக்கல் செய்வது ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை. எனவே அதன் அடிப்படையில் இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்கப்பட்டு இறந்துபோன நபரின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளது என்பது தெரியவருகிறது. அவ்வாறு இறந்த நபரின் மீது வழக்கு தாக்கல் செய்தபோது அதனை சரி செய்யும் பொருட்டு அவரது வாரிசுதாரர்களை கட்டளை 22 விதி 9 என்ற மனுவில் சேர்ப்பது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை மேலும் அவ்வாறு கட்டளை 22 விதி 9 சி.பி.சி மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தினை நிவர்த்தி செய்யும்படி கோரியுள்ள பரிகாரம் ஏற்கத்தக்கதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

## <u>உத்தரவு</u>

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 18.04.2026 இன்று பகரப்பட்டது.

M S VARALAKSHMI Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு :-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை)

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை.)

M S VARALAKSHMI Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.